DEC 2016
UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (ஒக்டோபர்/நவம்பர் 2016)

## GYS 2123 தென்னாசியப் புவியியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இலிருந்து இரண்டு வினாவையும் பகுதி -II இலிருந்து இரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

தென்னாசிய புறவரிப்படம் வழங்கப்படும்

---

### பகுதி – I

01. (அ) இந்தியாவின் காலநிலை வலையங்களை தென்னாசிய புறவரிப்படத்தில் குறித்து பெயரிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) தென்னாசியாவின் தரைத்தோற்ற வேறுபாடுகள் எவ்வகையில் பிரதேச ரீதியான காலநிலை வேறுபாடுகளுக்கு காரணமாக அமைகின்றது என்பதனை புனையா வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

02. (அ) உலக கவனத்தை ஈர்க்கும் பிராந்தியமாக தென்னாசியா விளங்குவதற்கான காரணங்களை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) தென்னாசியாவில் இலங்கையின் அமைவிட முக்கியத்துவம் குறித்து கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

03. (அ) “இந்தியாவில் இருந்து பிரிந்த பகுதியே இலங்கை” இக்கூற்றினை புவிச்சரிதவியல் அடிப்படையில் ஆதாரங்களை முன்வைத்து சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் தரைத்தோற்ற உருவாக்கம் குறித்த அடம்ஸ், உவாடியா, பேராசிரியர் குலரெத்தினம் போன்றவர்களின் கருத்துக்களை ஆதாரங்கள் உதாரணங்கள் துணை கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி – II

04. (அ) இந்தியாவில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் உழவன் விவசாயத்துறை எதிர்நோக்கிய சவால்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் உழவன் விவசாயத்துறையை மேம்படுத்த இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆராய்க. (15 புள்ளிகள்)

05. (அ) நிலச்சீர்திருத்தம் என்பதனால் கருதப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் எந்தளவிற்கு எதிர்பார்த்த இலக்கை அடைந்துள்ளது என்பதனை நுணுகி ஆராய்க. (20 புள்ளிகள்)

06. யாதாயினும் இரண்டினிற்கு குறிப்புரை தருக.

(அ) இலங்கையில் மகாவலி அபிவிருத்தி திட்டம்
(ஆ) இலங்கையின் அனல்மின் திட்டங்களும் எதிர்கொள்ளும் சவால்களும்
(இ) யப்பானின் கைத்தொழில் விருத்தி

(12½ x 02 = 25 புள்ளிகள்)

*****